DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.304/2022**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணிகண்டன் | | : |
| த/பெ | : நாகராஜன் | மதம் | : |
| கிராமம் | : அயம்பாக்கம் | தொழில் | : தனியார் நிறுவனம், மேலாளர் |
| வட்டம் | : சென்னை | வயது | : 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 09.03.2026**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>: PW1**

1. புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரமும் படித்து பார்த்தேன். எங்கள் நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கை குறித்து அனைத்தும் நன்கு தெரியும் என்று தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. அங்கீகரிப்பு கடித்ததில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் நிறுவனத்தின் இயக்குநர் பிரபாகரன் என்பவருடையது. வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள கையெழுத்து என்னுடையது. வழக்கறிஞர் அறிவிப்பில் நான் கையெழுத்து செய்யும் போது வழக்கை நடத்த அங்கீகரிப்பு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் பொதுவாக நிறுவனத்தின் சட்டப்பிரச்சனை அனைத்தும் நான் பார்த்து வந்தேன். காசோலையில் உள்ள விவரத்தை யார் எழுதி கொடுத்தார் என்றால் எதிரி நிறுவனத்தின் உரிமையாளரோ அல்லது ஊழியரோ எழுதி கொடுத்திருக்கலாம் காசோலை எங்கள் நிறுவனத்தின் Marketing Agent சரவணன் என்பவர் வாங்கி வந்தார். சரவணனை இவ்வழக்கில் சாட்சியாக பட்டியல் செய்யவில்லை. சரவணன் ஏப்ரல் 2022 ல் காசோலை

வாங்கச்சென்றார் எந்த தேதியென்று ஞாபகமில்லை. இந்த விவரத்தை புகார் மனுவில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. முதல் முறை காசோலை திருப்பப்பட்டபோது எதிரியிடம் கேட்டோமா என்றால் இல்லை.

2. எதிரி நிறுவனமே mail மூலம் காசோலையை வங்கியில் செலுத்தும் தேதி தெரிவித்திருந்தார்கள் அதன் பேரில் வங்கியில் செலுத்தினேன். அந்த Mail ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இரண்டாம் முறை வங்கியில் செலுத்தியது குறித்து Email மூலம் எதிரி நிறுவனத்திற்கு தகவல் தெரிவித்தோம். அந்த Email ஆவணமாக இந்த வழக்கில தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இரண்டாம் முறை அனுப்பிய மின்னஞ்சலுக்கு எந்த ஒரு பதில் அறிவிப்பும் எதிரி தரப்பில் இருந்து அனுப்பவில்லை. இரண்டாம் முறை வங்கியில் காசோலை செலுத்துவது குறித்து எங்கள் நிறுவனமே முடிவு செய்தது. இந்த விவரத்தை புகார் மனுவில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு கொடுத்த அங்கீகரிப்பு கடிதம் செல்லக்கூடியதல்ல என்பதால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. ரிட்டன் மெமோ செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அந்த ரிட்டன் மெமோவை யார் வேண்டுமென்றாலும் தயாரிக்கலாம் என்றால் சரிதான், வங்கி மூலம் பெறப்பட்டது. இவ்வழக்கு பொய்யான வழக்கு என்றும், உண்மையான வழக்கு என்றால் ரிட்டன் மெமோ வங்கியில் முத்திரையுடன் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரியுடம் எங்கள் நிறுவனம் Running Account வைத்துள்ளதாக தெரிவித்துள்ளேன் அதற்காக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அந்த கணக்கு முடிக்கப்பட்டது. புகார் காண்பிக்கும் தொகைக்கு கணக்கு சரிவர காண்பிக்க முடியவில்லை என்றும், பழைய காசோலையை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த பணமும்

எனக்கு தரவேண்டியதில்லை, வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K